பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 06 2025 **WEDNESDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. எல்லைதாண்டிய தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஆஸ்திரேலியா ஆதரவு அளிக்கும் என்று அந்நாட்டு துணைப் பிரதமர் திரு. **Richard Marles.** உறுதியளித்துள்ளார்.

3. ஓய்வூதியம் தொடர்பான கோரிக்கைகளை உரிய காலவரம்பிற்குள் நிறைவேற்ற வேண்டும் என்று அதிகாரிகளை மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

4. மத்தியப்பிரதேச மாநிலத்தில் வேன் மீது லாரி கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

5. **CAVA** லீக் வாலிபால் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**>>>>>><<<<<<**

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி நாளிதழ் ஒன்றில் எழுதிய கட்டுரை ஒன்றையும் பகிர்ந்துள்ளார்.

இந்த கட்டுரையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளை அமைச்சர் பட்டியலிட்டுள்ளார்.

**>>>>>><<<<<<**

எல்லைதாண்டிய தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டத்திற்கு ஆஸ்திரேலியா ஆதரவு அளிக்கும் என்று அந்நாட்டு துணைப் பிரதமர் திரு. **Richard Marles** உறுதியளித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

இருநாடுகளுக்கும் இடையே ஒருங்கிணைந்த பங்களிப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகளை இரு தலைவர்களும் அப்போது பகிர்ந்து கொண்டனர்.

பாதுகாப்பு துறையில் ஒத்துழைப்பு முக்கிய கனிமங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களில் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவம் குறித்தும் பிரதமருடன் ஆஸ்திரேலிய துணைப் பிரதமர் விரிவான ஆலோசனை நடத்தினார்.

இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் நிலையான, பாதுகாப்பான சூழல் தொடர்ந்து நீடிப்பதை இரு தலைவர்களும் உறுதி செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஆஸ்திரேலியாவில் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் தொழிலாளர் கட்சி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி பெற்றதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதுடன், இந்தியாவில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள உச்சிமாநாட்டிற்கு அந்நாட்டு பிரதமர் திரு. **Anthony Albanese**-க்கு அழைப்பு விடுத்தார்.

**>>>>>><<<<<<**

மூத்த குடிமக்களின் ஓய்வூதியம் தொடர்பான கோரிக்கைகளை உரிய காலவரம்பிற்குள் நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற அகில இந்திய ஓய்வூதிய குறைதீர்ப்பு முகாமில் பேசிய அவர், ஓய்வூதியதாரர்களின் கௌரவத்தை உறுதி செய்ய அதிகாரிகள் திறமையுடன் செயல்பட வேண்டியது அவசியம் என்று கூறினார்.

ஓய்வூதியதாரர்கள் நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர்கள் என்பதால், சட்டபூர்வ உரிமைகளுக்காக அவர்களை அலைக்கழிக்கக் கூடாது என்று அதிகாரிகளை டாக்டர் ஜிதேந்திர சிங் அறிவுறுத்தினார்.

>>>>>><<<<<<

தில்லியில் நடைபெற்று வரும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து, அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி புதுதில்லியில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

துணைநிலை ஆளுநர் திரு வி.கே.. சக்சேனா, முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயரதிகாரிகள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தலைநகரில் நடைபெற்று வரும் முக்கியமான உள்கட்டமைப்பு திட்டங்களை உரிய நேரத்தில் முடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அப்போது திரு. நிதின் கட்கரி அறிவுறுத்தினார்.

>>>>>><<<<<<

மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், இரண்டு நாள் பயணமாக இத்தாலி சென்றுள்ளார்.

அவர் தமது இந்த பயணத்தின் போது, இருநாடுகளுக்கும் இடையேயான பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு தலைவர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

ரோம் நகரில் நடைபெறும் இந்தியா-இத்தாலி கூட்டு பொருளாதார ஒத்துழைப்பு ஆணையத்தின் 22-வது கூட்டத்திற்கு அந்நாட்டு அமைச்சர் திரு. **Antonio Tajani** யுடன் இணைந்து திரு. பியூஷ் கோயல் தலைமையேற்கவுள்ளார்.

இந்த கூட்டம், இருநாடுகளுக்கும் இடையோன புதிய வாய்ப்புகள் மற்றும் முன்னேற்றத்தை மேம்படுத்தும் வகையில் நடைபெறவிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

இந்தியாவும், தென்அமெரிக்க மண்டல பொருளாதார அமைப்பான **Mercosur** –ம் வர்த்தக ஒப்பந்தத்தை விரிவுபடுத்த தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக பராகுவே நாட்டின் அதிபர் திரு. **Santiago Pena Palacious** தெரிவித்துள்ளார்.

மும்பையில் வர்த்தக சபை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், **Mercosur** அமைப்பில் உள்ள நாடுகளிடமிருந்து வர்த்தகம் தொடர்பான அம்சங்களை இந்தியாவும், பராகுவே-வும் தொடரவிருப்பதாக கூறினார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரிவுபடுத்துவதற்கான பேச்சுவார்த்தையை தொடங்க இருநாடுகளும் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் திரு. **Santiago Pena Palacious** கூறினார்.

>>>>>><<<<<<

உலக சுற்றுச்சூழல் தினத்தை ஒட்டி, புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திரமோடி, மரக்கன்று நடும் சிறப்பு இயக்கத்தை நாளை தொடங்கி வைக்கவுள்ளார்.

அன்னையின் பெயரில் ஒரு மரம் என்ற திட்டத்தின் கீழ், ஆலமரக் கன்றை அவர் நட்டு வைக்கிறார்.

ஆரவல்லி பசுமைத் தொடர் திட்டத்தின் கீழ், 700 கிலோமீட்டர் தொலைவுக்கு வனப்பரப்பை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த இயக்கம் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடைபெறும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

வரும் 2027ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் தேதி இந்த கணக்கெடுப்பு தொடங்கும் என்றும், பனி படர்ந்த யூனியன் பிரதேசங்களான லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீரிலும், ஹிமாச்சலப்பிரதேசம், உத்ரகாண்ட் மாநிலங்களிலும் மக்கள்தொகை கணக்கெடுப்பு அடுத்த ஆண்டு அக்டோபர் 1ஆம் தேதி தொடங்கும் என்றும் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

மத்தியப்பிரதேச மாநிலத்தில் சிமெண்ட் ஏற்றிவந்த லாரி வேன் மீது கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் 6 பெண்கள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.

**Jhabua** மாவட்டத்தில் இந்த விபத்து ஏற்பட்டதாகவும், உயிரிழந்தவர்கள் அனைவரும் திருமண நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு திரும்பிய போது விபத்தில் சிக்கியதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவர் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூகவலைதளத்தில் இரங்கல் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஹரியானா மாநில காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களுடன், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி இன்று ஆலோசனை நடத்தினார்.

ஹரியானாவில் கட்சியை பலப்படுத்துவது குறித்து அப்போது ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

நெதர்லாந்து பிரதமர் திரு. **Dick Schoof** தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

நெதர்லாந்தில் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை **PVV** கட்சி விலக்கிக் கொள்ள முடிவெடுத்திருப்பதை அடுத்து, தாம் பதவி விலகியதாக செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

எனினும், நெதர்லாந்து தற்போது எதிர்கொண்டுவரும் முக்கிய சவால்களை சமாளிக்க, தற்காலிக பிரதமராக தொடர்ந்து நீடிக்கவிருப்பதாகவும், திரு **Dick Schoof** கூறினார்.

>>>>>><<<<<<

சென்னை ஆகாஷவாணியின் ரெயின்போ பண்பலை வரும் 9ஆம் தேதி முதல் நேயர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்யும் வகையில், நிகழ்ச்சிகளை மாற்றியமைத்து ஒலிபரப்புகிறது.

இதன்படி பகல் நேரங்களில், **Rush hour Rainbow, Rainbow Rap, Get set go, Hi Snagithiye** போன்ற நிகழ்ச்சிகளுடன், இரவு நேரங்களில் ரெயின்போ ரீவைன்ட், காற்றின் மொழி, நீங்காத ராகம், இன்னிசை இரவு போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

>>>>>><<<<<<

பாகிஸ்தானுக்கு எந்தவொரு நிதியுதவியும் வழங்கினால், அதனை அந்நாடு தவறான செயல்பாடுகளுக்கு பயன்படுத்த வாய்ப்புள்ளதாக ஆசிய வளர்ச்சி வங்கியை இந்தியா அறிவுறுத்தியுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியை பாகிஸ்தான் தவறான வழியில் பயன்படுத்துவது குறித்த கவலையை இந்தியா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் பாதுகாப்புத் துறைக்கான செலவினங்கள் அதிகரித்த போதிலும், அந்நாட்டு ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வரி விகிதம் குறைந்திருப்பதையும் இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது.

>>>>>><<<<<<

பங்குச்சந்தை குறியீடுகள் கடந்த 3 நாட்களுக்குப் பிறகு, இன்று சந்தை வர்த்தகம் நிறைவடைந்தபோது, உயர்வுடன் முடிந்தது.

மும்பை பங்குச் சந்தை குறியீடு 261 புள்ளிகள் அதிகரித்து, 80ஆயிரத்து 998-ஆக முடிந்தது.

சூதசிய பங்குச்சந்தை குறியீடு 78 புள்ளிகள் அதிகரித்து 24 ஆயிரத்து 620-ஆக நிறைவடைந்தது.

>>>>>><<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் கோப்பையை முதல்முறையாக வென்ற பெங்களூரு அணியினர், சின்னசாமி மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட போது, மைதானத்திற்கு அருகே ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 11-ஆக அதிகரித்துள்ளது.

முன்னதாக, பெங்களூரு வந்த அணியினருக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

**CAVA** லீக் வாலிபால் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 3-2 என்ற ஆட்டக்கணக்கில் கஜகஸ்தானை வென்றது.

இன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இந்தியா - ஈரானை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

ஐசிசியின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரர் விருதுக்கு மகளிர் பிரிவில் இந்தியாவின் **Smriti Mandhana** பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

>>>>>><<<<<<